PAFFREL

**2024 எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் தொடர்பான அறிக்கை**

**2024 ஒக்றோபர் மாதம் 27 ஆம் திகதி**

2024 ஒக்றோபர் மாதம் 26 ஆம் திகதி எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் அமைதியாக நிறைவு பெற்றது. 48 வாக்கெடுப்பு நிலையங்களில் 55,643 வாக்காளர்கள் வாக்களிப்பதற்குத் தகைமை பெற்றிருந்தனர். 2018 ஆம் ஆண்டு உள்ளூராட்சி அதிகாரசபைத் தேர்தலில் எல்பிட்டி பிரதேச சபைக்குப் போட்டியிடுவதற்கு முன்னிலையான ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி சமர்ப்பித்த நியமனப் பத்திரம் நிராகரிக்கப்பட்டமையால், அக்கட்சியால் மேற்கொள்ளப்பட்ட சட்ட ரீதியான இடையீட்டால் அக்கட்சியின் வேட்பாளர்கள் அடிப்படை உரிமை மீறல் மனுவொன்று தாக்கல் செய்யப்பட்டது. உயர் நீதிமன்றத் தீர்ப்பு வழங்கப்படும் வரைக்கும் எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தலை நடாத்துவதற்கு இடைக்காலத் தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது. இறுதியாக 2019 ஆம் ஆண்டு தேர்தல் குறிப்பிடத்தக்க சதவீதமான வாக்களிப்புடன் நடாத்தப்பட்டிருந்தது. அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட எல்பிட்டி பிரதேச சபையின் உத்தியோகபூர்வ பதவிக்காலம் 2024 மார்ச் 06 ஆம் திகதியுடன் நிறைவு பெற்றிருந்தது. ஆயினும், அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் 2024 நவம்பர் மாதம் 04 ஆம் திகதி வரைக்கும் பிரதேச சபை உறுப்பினர்களுக்குக் கிடைத்த மக்கள் ஆணை நீடிக்கப்பட்டிருந்தது. இலங்கை தேர்தல் ஆணைக்குழு கடந்த ஆகஸ்ட் மாதம் அறிவிக்கப்பட்ட எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் 2024 ஒக்றோபர் 26 ஆம் திகதி நடாத்தப்பட்டது.

2024 எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தலில் 28 வட்டாரங்களில் 08 அரசியற் கட்சிகளும், 01 சுயேட்சைக் குழுவிலும் 279 வேட்பாளர்கள் போட்டியிட்டனர். கலப்பு விகிதாசாரப் பிரதிநிதித்துவ முறையின் கீழ் 17 உறுப்பினர்கள் வட்டார முறையிலான வாக்குகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டதுடன், 11 பேர் விகிதாசார முறையின் கீழ் தேர்ந்தெடுக்கப்படுவர். உள்ளூராட்சி மன்றங்களில் 25% வீதமான பெண்களின் பிரதிநிதித்துவத்தை உறுதிப்படுத்தும் வகையில் 07 பெண்கள் தேர்ந்தெடுக்கப்படல் வேண்டும்.

தேர்தல் தினத்தன்று எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் பெறுபேறுகள் வெளியிடப்பட்டதுடன், மொத்தமாக 36,825 வாக்குகள், அதாவது 63% வீதமான வாக்குகள் பதிவாகியிருந்தன. பதிவாகிய மொத்த வாக்குகளில் 520 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் தேசிய மக்கள் சக்தி 17,295 வாக்குகளைப் பெற்று 15 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. செல்லுபடியான 36,305 வாக்குகளில் ஐக்கிய மக்கள் சக்தி 7,294 வாக்குகளைப் பெற்று 06 ஆசனங்களையும், ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணி 3,597 வாக்குகளைப் பெற்று 03 ஆசனங்களையும், பொது முன்னணி 2,612 வாக்குகளைப் பெற்று 02 ஆசனங்களையும், சுயேட்சைக் குழு 2,568 வாக்குகளைப் பெற்று 02 ஆசனங்களையும் பெற்றுக் கொண்டது. ஐக்கிய சுதந்திரக் கூட்டணி 1,305 வாக்குகளைப் பெற்று 01 ஆசனமும், தேசிய மக்கள் கட்சி 521 வாக்குகளைப் பெற்று 01 ஆசனத்தையும் பெற்றுக் கொண்டது. ஜனசெத முன்னணி அல்லது தெவன பரபுர கட்சிகளுக்கு எவ்வித ஆசனமும் பெற்றுக் கொள்ளவில்லை.

ஜனாதிபதித் தேர்தலின் பின்னரும், எதிர்வரும் மாதத்தில் நடாத்தப்படவுள்ள பாராளுமன்ற பொதுத் தேர்தலுக்கு முன்னர் நடாத்தப்பட்ட எல்பிட்டி பிரதேச சபைத் தேர்தல் பிரதேச மட்டத்திலான தேர்தலாக தேர்தல் ஆணைக்குழுவின் வழிகாட்டலின் கீழ் தேர்தல் முறைப்பாடுகள் மற்றும் சம்பவங்கள் குறைவாகவும் அமைதியாகவும் இடம் பெற்றது.

ப.்.வ்ரல் அமைப்பு தேர்தல் தினத்தன்று 48 நிலையக் கண்காணிப்பாளர்களைக் கடமையில் ஈடுபடுத்தியதுடன், எல்பிட்டி பிரதேச சபை அதிகார எல்லைக்குள் வாக்கெடுப்பு நிலையங்களில் குறிப்பிடத்தக்களவு பகுதிகளை உள்ளடக்கியதாக 02 நடமாடும் கண்காணிப்பாளர் குழுக்களை கடமையில் ஈடுபடுத்தியிருந்தது. எல்பிட்டி,

PAFFREL

பட்டுவத்தஹேனவில் அமைந்துள்ள வாக்கெடுப்பு நிலையத்தில் தேசிய அடையாள அட்டைக்குப் பதிலாக, ஆட்பதிவுத் திணைக்களத்தால் வழங்கப்பட்டுள்ள உறுதிப்படுத்தப்பட்ட சான்றிதழைப் பயன்படுத்தி வாக்காளர் ஒருவர் வாக்களிப்பதைத் தடுத்தமை உள்ளிட்ட தேர்தல் தினத்தன்று ப:்வ்ரல் அமைப்பு 02 முறைப்பாடுகள் கிடைத்திருந்தது. அவற்றில் ஒரு முறைப்பாடு உறுதிப்படுத்தப்பட்டிருந்தது. மேலும் எல்பிட்டி பிரதேசத்தில் அமைந்துள்ள வாக்கெடுப்பு நிலையமொன்றுக்கு வாக்களிப்பதற்கு சென்ற போது தனது பெயருக்குரிய வேறொரு நபர் வாக்களித்திருந்தமையை வாக்காளர் ஒருவர் முறைப்பாடு செய்திருந்தார்.

தடையின்றி வாக்களிப்பதற்கான செயன்முறையை உறுதிப்படுத்துவதற்கு அடையாள அட்டைகள் மற்றும் அவற்றுக்குரிய ஆவணங்களுடன் எதிர்வரும் தேர்தல்களில் வாக்களிப்பதற்கு தயாராகுமாறு ப:்வ்ரல் அமைப்பு வாக்காளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளது. ஆயினும், தேர்தலுக்கு முன்னரான தினத்தில் வாக்களித்தல் தொடர்பாக குறிப்பிடத்தக்களவு அழுத்தங்கள் கொடுக்கப்பட்ட பொதுவான சம்பவங்கள் அல்லது நிலைமைகள் பதிவாகியிருக்கவில்லை. தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதியிலிருந்து வன்முறைச் சம்பவங்கள் மற்றும் அரச அதிகாரத்தையும், அரச வளங்களையும் மற்றும் அரச ஊழியர்களையும் முறைகேடாகப் பயன்படுத்தல் தொடர்பாக ப:்வ்ரல் அமைப்புக்கு முறைப்பாடுகளோ அல்லது சம்பவங்கள் பதிவாகியிருக்காமை முக்கிய விடயமாக அமைந்திருந்தது.

ப:்வ்ரல் அமைப்பு தேர்தல் தினத்தன்று கடமையில் ஈடுபடுத்தி நடமாடும் கண்காணிப்பாளர்கள் மற்றும் வாக்கெடுப்பு நிலையக் கண்காணிப்பாளர்களின் அவதானிப்புகளுக்கமைய, வாக்கெடுப்பு நிலையங்களில் எவ்வித முறைகேடுகளும் இடம்பெறவில்லை. ஒருசில விதிவிலக்குகளைத் தவிர, இயலாமைக்குட்பட்ட நபர்களுக்குப் போதியளவு வசதிகள் வாக்கெடுப்பு நிலையங்களில் காணப்பட்டன. சட்ட விரோத பரப்புரைகள், சட்டவிரோத பொதுக் கூட்டங்கள், பயமுறுத்தல், வாக்காளர்களை அச்சுறுத்தல், வாக்கெடுப்பு நிலைய முகவர்கள் மற்றும் தேர்தல் கடமையிலிருந்த அலுவலர்களுக்கு அழுத்தம் கொடுத்தல், வாக்காளர்களை ஏற்றிச் செல்லல், தேர்தல் அலுவலகம் தடை செய்தல், அடித்துத் தாக்குதல், வாக்காளர்களை வாக்கெடுப்பு நிலையத்திலிருந்து விரட்டியடித்தல், சட்ட விரோதமாக வாக்களித்தல், வாக்குப் பெட்டிகள் மற்றும் வாக்குச் சீட்டுக்களைப் பறிமுதல் செய்தல், சட்டவிரோதத் தேர்தல் பரப்புரைகள் போன்றன பதிவாகியிருக்கவில்லை. வாக்கெண்ணும் நிலையங்களைத் தயார் செய்தல் மிகவும் அமைதியான முறையிலும், ஒழுக்கமாகவும் இடம்பெற்றது. ஒருசில வாக்கெண்ணும் நிலையங்களிலும் ஏனைய தேர்தல் கண்காணிப்பு நிறுவனங்கள் தேர்தல் கண்காணிப்புப் பணிகளில் ஈடுபட்டிருந்தனர். வாக்கெண்ணும் நிலையங்களில் வெளிப்படைத் தன்மை காணப்பட்டதுடன், வாக்கெண்ணுவதற்குக் கொண்டு வரப்பட்ட வாக்குப் பெட்டிகளில் ஒத்திசைவற்ற தன்மைகள் காணப்படவில்லை. அனைத்து வாக்கெடுப்பு நிலையத்திலும் தேர்தல் ஆணைக்குழுவின் ஒட்டுமொத்த நெறிப்படுத்தல் மற்றும் வழிகாட்டல் மற்றும் இலங்கை பொலிசாரால் போதியளவு பாதுகாப்புடன் சுதந்திரமானதும் நீதியானதுமான தேர்தல் உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட தரப்பினர்கள் மேற்கொண்ட முயற்சிகள் தொடர்பாக ப:்வ்ரல் அமைப்பு நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றது.

உள்ளூராட்சி அதிகாரசபை மட்டத்தில் ஜனநாயத்தை உறுதிப்படுத்துவதற்கு இத்தேர்தல் தீர்மானம்மிக்கதாக அமைவதுடன், தேர்தலுக்கு முன்னரான காலப்பகுதி மற்றும் தேர்தல் தினத்தன்றும், தேர்தலுக்குப் பின்னரும், வன்முறைகளில் ஈடுபடாமலும், தேர்தல் சட்டங்களை மீறாமலும் செயற்பட்டமை வாக்காளர்கள், வேட்பாளர்கள், அரசியற் கட்சிகள் மற்றும் சுயேட்சைக் குழுக்களின் முற்போக்கான செயற்பாடுகளாக அமைகின்றன. ப:்வ்ரல் அமைப்பு எதிர்வரும் பாராளுமன்ற பொதுத் தேர்தல், பின்னர் நடாத்தப்படும் தேர்தல்களிலும் ஜனநாயகத்தை உறுதிப்படுத்துவதற்காக தொடர்ச்சியாகத் தனது இடையீடுகளை மேற்கொள்ளும்.

**றோஹண ஹெட்டியாராச்சி**
**நிறைவேற்றுப் பணிப்பாளர்**